தி.மு.க. தயவில்தான் தற்போதைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இங்கு நம்முடைய கஜா என்கிற கஜேந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார், "நான் பல ஆண்டு காலம் அ.தி.மு.க.விற்குப் பணியாற்றி இருக்கிறேன்; இரண்டு முறை தேர்தல் களத்தில் ஈடுபட்டு இருக்கிறேன்; இருந்தாலும், அந்த இயக்கத்தில் இருந்த போது நான் விசுவாசமாகப் பணியாற்றி இருக்கி றேன்" என்பதை வெளிப்படையாக அவர் எடுத்துச் சொன்னார். நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகி றேன்.

எப்போதுமே ஒருவன், ஒரு தொண்டனாக இருந்தாலும் சரி, ஒரு செயல் வீரனாக இருந்தாலும் சரி, ஒரு தளகர்த்தராக இருந்தாலும் சரி, தளபதியாக இருந்தாலும் சரி, தலைவராக இருந்தாலும் சரி, தான் இருக்கும் கட்சிக்கு விசுவாசமாக இருந்திட வேண்டும். எனவே, நிச்சயமாக தி.மு.க.வில் இணைந்திருக்கும் கஜேந்திரன் அவர்கள், நிச்சய மாக தி.மு.க.விற்கு விசுவாசமாக இருந்து பணி யாற்ற இருக்கிறார் என்பதை இதன் மூலமாக அறிந்து கொள்கிறேன். அவர் மட்டுமல்ல; இங்கு வந்திருக்கும் நீங்களும் அப்படித்தான் இருக்கப் போகிறீர்கள்.

தி.மு.க.வினுடைய வரலாறு என்பது, 1949 இல் தொடங்கி, அதற்குப் பிறகு நடைபெற்ற 1952 இல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை என்று சொன்னாலும், 1957ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களில் வெற்றி பெற்றோம். அதற்குப் பிறகு, 1962இல் தேர் தல் களத்தில் ஈடுபட்டு, நாம் எதிர்க்கட்சி வரிசையில் இடம்பெறும் அளவிற்கு 50 இடங்களில் அன் றைக்கு வெற்றி பெற்றோம். அதற்குப் பின்னால் 1967இல் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றோம்.

அண்ணா மறைவிற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பணியாற்றினார். அதற்குப் பிறகு 1971இல் நடை பெற்ற தேர்தலில் வெற்றி பெற்றோம். 1971இல் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத் தில்தான், 1975இல் இந்தியாவில் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது. அந்த நெருக்கடி நிலையை நாம் எதிர்த்தோம். அந்த நெருக்கடி நிலையை எதிர்த்தால் ஆட்சி பறிபோகும் என்பதைத் தெரிந்தே எதிர்த்தோம். நாம் கவலைப்படவில்லை.

நெருக்கடி நிலையை எதிர்த்ததால் ஆட்சி கலைப்பு!

கலைஞர் அவர்கள் அதைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல், "ஆட்சி நமக்கு முக்கியமல்ல; ஜனநாயகம் தான் நமக்கு முக்கி யம்" என்று கருதி, அந்த நெருக்கடி நிலையை எதிர்த்து, சென்னை கடற்கரையில் லட்சக்கணக் கான மக்களை ஒன்று திரட்டி, தீர்மானம் போட்டு அன்றைக்கு நிறைவேற்றினார்கள். "நெருக்கடி நிலையை ரத்து செய்யுங்கள்; கைது செய்து சிறை யில் வைத்திருக்கும் தலைவர்களை எல்லாம் உட னடியாக விடுதலை செய்யுங்கள்" என்று தீர்மா னம் போட்டார்கள்.

அந்தத் தீர்மானம் போட்ட காரணத்தால், 1976 ஆம் ஆண்டு நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 ஆண்டு காலம் நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வர முடியவில்லை.

> "நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டில் வந்து விடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன்."

மீண்டும் 1989இல் ஆட்சிக்கு வந்தோம். 1991 இல், இலங்கையில் இருக்கும் தமிழர்களுக்கு தி.மு.க. துணை நிற்கிறது என்ற ஒரு பிரச்சாரத்தை நடத்தி, அதற்காக நம்முடைய ஆட்சியைக் கலைத் தார்கள்.

அதற்குப் பிறகு 1996இல் நாம் ஆட்சிக்கு வந் தோம். அதற்குப் பிறகு 2001இல் நடைபெற்ற தேர் தலில் தோற்றோம். 2006இல் ஆட்சிக்கு வந் தோம். 2011இல் தோற்றோம். அதற்குப் பிறகு 2021இல் ஆட்சிக்கு வந்தோம்.

இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், வெற்றி தோல்வி என்பது நம்மைப் பொறுத்தவரையில் மாறி மாறி வரும். அதற்காக வெற்றியைக் கண்டு வெறி கொண்டு அலைந்து கொண்டிருப்பதும் இல்லை; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் என்றைக்கும் பணியாற்றக் கூடி யவன்தான் தி.மு.க.காரன் என்பதை இன்றைக்கு நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் தான், இன்றைக்கு வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருந்தாலும், ஆட்சிப் பொறுப்பை நாம் இழந்திருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து பணியாற்றிக் கொண்டி ருக்கும் இந்த சூழ்நிலையில், நீங்கள் எல்லாம் இங்கு நம்முடைய கஜா என்கிற கஜேந்திரன் தலை மையில் வந்து சேர்ந்திருப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

தி.மு.க. தயவில் தான் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது!

இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தய வில் தான் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஏனென்றால், நாம் வெற்றி பெற வேண்டும்; தி.மு.க. தலைமையில் ஆட்சி அமைய வேண் டும்; எதிர்க்கட்சிகள் எல்லாம் தோற்க வேண்டும் என்ற நிலையில் தான் நாம் தேர்தல் களத்தைச் சந்தித்தோம். நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தி.மு.க. ஆட் சிக்கு வர வேண்டும் என்று கருதி நம்மோடு கூட் டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக் கிறது.

அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே பல இடங்களில் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார் கள், "நாங்கள் வருகிறபோது, எங்கள் கூட்டணிக் கட்சியின் தலைவர் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினிடத்தில் சொல்லிவிட்டுத் தான் வந்திருக் கிறோம்" என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்லிவிட்டுச் செல்லுகிற நேரத்தில் நான் சொன்னேன், "நீங்கள் செல்லுங்கள்; உங் களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜன நாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனா திபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பி.ஜே.பி. ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழி யனுப்பி வைத்தேன்."

எனவே, நம்முடைய தயவோடு நடை பெறும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த நிகழ்ச் சியில் உறுதி எடுப்போம், உறுதி எடுப்போம், உறுதி எடுப்போம் என்று கூறி, மீண்டும் வந்திருக் கும் உங்கள் அத்தனை பேரையும் வருக, வருக, வருக என்று வரவேற்று என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நரேன்கணபதி ஏற்பாட்டில்

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு!

பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி – ஏ.எம்.வி. பிரபாகரராஜா வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 7

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நரேன் கணபதி ஏற்பாட் டில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் முன்னிட்டு இன்று (07.06.2026 ஞாயிற் றுக்கிழமை) காலை 11.30 மணிக்கு காரம்பாக்கம் சுபம் காம்ளக்ஸ் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மதுர வாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, இளைஞர் அணி மாவட்ட அமைப் பாளர் ஏ.எம்.வி.பிரபாக ரராஜா ஆகியோர் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரு வுருவபடத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 நபர்க ளுக்கு அறுசுவை அசைவ உணவு வழங்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மா.இ.அ.து.அமைப்பாளர் கள் ச.சங்கர்கணேஷ் எம். சி., செ.ரவி, வட்ட கழக செயலாளர் சி.சுந்தர், மாவட்ட பிரதிநிதிகள் க. கைலாசம், இரா. ராஜேந் திரன், மாமன்ற உறுப்பி னர் ஹேமலதா கணபதி, எம்.சி., மாவட்ட துணை அமைப்பாளர்கள்:

எஸ்.பாலமுருகன், மா. பா.சித்ராலயம், ஜெ.ஏ. துரை, அ.ராகேஷ், அ. கவுஸ்பாஷா,

வட்ட கழக நிர்வாகிகள்: மு.ஆறுமுகம், L.அருள், R.லதா, E.ஜெயவேல், இரா.ரமேஷ், இரா.சீனி வாசன், K.ராமதாஸ், V.ஜெகன்நாதன், G.ஜீனிவாசன்

பகுதி அமைப்பாளர் கள்: M.செல்வதுரை, S.நித் தியானந்தம், S.சண்முக சுந்தரம், , பகுதி துணை அமைப்பாளர்கள் பெ. ஹரிகிருஷ்ணன் R.கோவிந் தசாமி, B.ஞானம், D. லோகேஷ், , E.முனுசாமி, A. தமீன்ஷா, J. வேல்பாண்டி யன், K.முருகன், K.கந்த சாமி, E.ஹரிபாபு, A.விஸ் வநாதன், R.பிரேம்குமார், , R.கோவிந்தராஜ், L.தானு வேல், V.சுரேஷ், M.சரவ ணன், க.விக்ரம், A.சுமன், M.மகேஸ்வரி, A.பிரேமா, A. ஆனந்த் , M.சஞ்சய் மற் றும் இளைஞர்அணி பகுதி துணை அமைப்பாளர்கள் R.தியாகராஜன். R.விஜய். செந்தில் குமார். D. ராஜேஷ். இரா.பா.உதயகு மார். D.நரேஷ். ஜிம்.மூர்த்தி, வட்ட அமைப்பாளர்கள்

M.பிரதாப், சா.சுரேஷ் மோசஸ், R R ஹரிஹரன் , ஏ வினோத், ம.கிரி, S. முக மதுபஷீர், ப அனிஷ் குமார், சு தினேஷ் குமார் மற்றும் வட்ட கழக நிர்வா கிகள், கழக முன்னோடி கள், கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொள் கிறார்கள்.

இறுதியாக வட்டத் துணைச் செயலாளர் ஆர். எஸ். தில்லைவாணன் நன்றி உரையாற்றுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

திருவொற்றியூர் 10வது வட்டத்தில் நல உதவிகள்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்குகிறார்! தி.மு. தனியரசு தலைமை! எஸ்.தமிழ்செல்வன் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 7-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 10வது வட்ட தி.மு.க. சார்பில் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன் னிட்டு ஆறுஞ்சுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (7.6.2026 ஞாயிற் றுக்கிழமை) காலை 10 மணிக்கு மேற்கு மாடவீதி தெருவில், 10வது வட்ட செயலாளர் எஸ்.தமிழ் செல்வன் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமை யில் நடைபெறுகிறது.

இ.பாலசுப்பிரமணி யன், டி.என்.முரளி மனோ கரன், கே.மோகன், எஸ். சிரிஷா, சி.டி.வீரப்பன், பி.கணேஷ் குமார், வி.ஜி. எம்.பாலாஜி, எம்.ராஜேந் திரன், ஜி.சுகுமார் ஆகி யோர் வரவேற்கின்றனர்.

ஆர்.சி.ஆசைதம்பி, எம். வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக கொடி ஏற்றி 500 பேருக்கு ஆறுஞ்சுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் வழங்குகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரா சாமி, முன்னாள் திரு வொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் பங்கேற்க உள் ளனர்.

ஆகையால் மாநில நிர் வாகிகள், மாவட்ட நிர்வா கிகள், பகுதி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர் கள், வட்ட செயலாளர் கள், மாவட்ட பிரதிநிதி கள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள், கழக முன் னோடிகள் கலந்துகொள் ளுமாறு கேட்டுக்கொள்கி றேன்.

கே.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

தலைமைக் கழக அறிவிப்பு!

ஊடக விவாதங்களில் கழகத்தின் சார்பில் செய்தித் தொடர்புக் குழுவினர் கலந்து கொள்வதையும், பல்வேறு விவகாரங்களில் கழகத்தின் நிலைப்பாட்டை ஊடகங்களில் தெளிவுபடுத்திடும் பணிகளையும் ஒருங்கிணைத்திட **வழக்கறிஞர் இ.பரந்தாமன், டாக்டர் ஹபிசுல்லா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி** ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்

தலைமைக் கழகம்

தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்!

பெரம்பூர் 44(அ) வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

வட்டப் பொறுப்பாளர் எஸ். அருள் அறிக்கை!

சென்னை ஜூன் 7-

பெரம்பூர் தெற்கு பகுதி, 44(அ) வட்ட கழ கத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலை ஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (07/06/2026 ஞாயிற்றுக்கி ழமை) மதியம் 12:00 மணி யளவில் காமராஜர் தெரு அண்ணா தெரு சந்திப்பில் அமைந்துள்ள குமார் டீ கடை அருகில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் மாவட் டக் கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலா நிதி வீராசாமி MP, பெரம் பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க. ஜெயரா மன், இரா.நரேந்திரன், த. ஆறுமுகம், எஸ்.ஆர். கமலக் கண்ணன், வி.தயாளன், நா.சேகர், ந.சர்வ ஜெயா தாஸ் மற்றும் பகுதி, வட் டக்கழக நிர்வாகிகள், அனைத்து மாவட்ட மற் றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப் பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து பாகமுகவர்கள் (BLA2), பாக தகவல் தொழில்நுட்ப ஒருங்கி ணைப்பாளர்கள் (BDA), பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் மற்றும் அனைத்து கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்துக் கொள்ளுமாறு வட்டக்கழக பொறுப்பா ளர் எஸ். அருள் கேட்டுக் கொண்டுள்ளார்.

குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

புதுக்கோட்டை மு.பஷீர் அகமது தலைமை!

சென்னை, ஜூன் 7

தி.மு.க. அயலக அணி குவைத் நடத்திய நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந் தநாள் விழா குவைத்தில் உடன் பிறப்புகளோடு மிக எழுச்சியாக 05.06.2026 வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது.

கழகத்தலைவர் திரா விட நாயகர், தளபதி மு.க.ஸ்டாலின், எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது அவர்களின் தலை மையில், இணைச் செயலா ளர்கள் காட்டூர் ஆறுமு கம், முனசந்தை சிக்கந்தர், வேலம்புதுக்குடி மு.ஜியா வுதீன், ராயல் ஜி.பிரகாஷ் அவர்களின் முன்னிலை யில், தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் புதுகை கனி, துணைச் செயலாளர் கண்டியூர் ரா.ஷாத் அன்வர், இளை ஞர் அணி இணைச் செய லாளர் விருதாச்சலம் பாஃரூக் காசிம் அவர்க ளின் ஒருங்கிணைப்பில் குவைத், பர்வானியா பகு தியில் அமைந்துள்ள ராயல் பேலஸ்ஸில் இனிப் புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் முத்தமி ழறிஞர் கலைஞரின் வர லாற்று சிறப்பு மிக்க சாத னைகளையும், துரோகி களின் துரோகங்களையும் ஆலோசகர் பெரியவர் ஆலஞ்சியார் அவர்கள் இளையோற்களுக்கு எடுத் துறைத்தார்கள். வரலாற்று சிறப்புமிக்க இந்நிகழ்வில் உடன்பிறப்புகளாய் அய லக தேசத்தில் ஒன்றி னைந்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வவில் மனப் பாறை குமார், வரகூர் செந்தில் ராஜா, காரைக் குடி மணி,சிதம்பரம் அல் தாப் உசேன், கண்டியூர் இலியாஸ், தளவாய் தினேஷ், வெங்கட், அறந் தாங்கி மணி,கறம்பக்குடி ஜாபர் சாதிக், கறம்பக்குடி அப்பாஸ், கொளத்தூர் கணேஷ், திட்டச்சேரி ஹமீத், மேலூர் கார்த்தி, ஜான்பாஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக வாணியம் பாடி அசோக்குமார் நன்றி யுரை நிகழ்த்தினார்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மத்திய ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பிரகாஷ் ஞான ஒளி, ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் – தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு இனிப்புகள் வழங்கினார் உடன் மாவட்ட அவைத்தலைவர் கே. திராவிட பக்தன், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.டி. இ. ஆதிசேஷன், ஒன்றியச் செயலாளர் அரிகிருஷ்ணன், நிர்வாகிகள் ராஜசேகர், பி.கே. நாகராஜ், மெய்யழகன், பெருமாள், சேகர்,வாசு, குமரேசன், சங்கர், வேதாச்சலம், தினேஷ், பலராமன், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பள்ளி மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

சென்னை, ஜூன் 7-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார் பில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பெருநகர சென்னை மாந கராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

பதினாறாவது வட்டம் குளக்கரை பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் படிக் கும் பள்ளி மாணவ மாண விகளுக்கு நலத்திட்ட உத விகள் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட் டில் 16வது வட்டச் செய லாளர் இ.கண்ணப்பன் தலைமையில் வழங்கப் பட்டது.

பள்ளி மாணவ மாண விகளுக்கு நோட்டு புத்த கம், பென்சில், பேனா, ரப் பர் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பதிவு செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

16வது வட்ட துணைச் செயலாளர் புவனேஸ்வரி என். மகேஷ் குமார், மாத வரம் வடக்கு பகுதி இளை ஞரணி துணை அமைப்பா ளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், குளக்கரை பகுதி இளைஞரணி நிர் வாகி எஸ். மஞ்சுநாதன் முன்னிலையில் நடை பெற்ற இந்த நிகழ்ச்சியில் ஷியாம், குமார் நிர்வாகி கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட மாண வர்களும் பெற்றோர்க ளும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தங்க ளது ஆட்சி காலத்தில் சத் துணவில் முட்டை உள் ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாணவர்க ளுக்கு வழங்கியதை நினைவு கூர்ந்து கலைஞ ரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத் தினார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்த விழாவில் பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன், பேரவை நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கோ.மோகன்குமார், பொருப் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ், அமைப்புச் செயலாளர் நா.செல்வகுமார், பிரச்சாரச் செயலாளர் மு.ஜோதி, மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.